வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்

பிறப்பிப்பவர் : க. முனுசாமி, M.Sc.,M.A.,B.Ed.,M.Phil.,M.B.A

ந.க.எண். 3946 / அ1 /2020 நாள். 09 .2021

பொருள் : பள்ளிக் கல்வித்துறை - பொதுப்பணிகள் - கருணை அடிப்படையில் நியமனம் - பணிக்காலத்தில் காலமான அரசு ஊழியர் திரு. எம். இராஜசேகரன் என்பவரின் வாரிசுதாரர் திரு. இரா. திருமலை இளநிலை உதவியாளர் என்பவரின் பணியினை வரன்முறை செய்து ஆணை வழங்குதல் - தொடர்பாக.

பார்வை : 1. திருப்பத்தூர் மாவட்டக் கல்வி அலுவலரின் செயல்முறைகள் ந.க.எண். 4309/ அ1 / 2016 நாள் 27-07-2016 (ஒருங்கிணைந்த மாவட்டம்)
2. அரசாணை (நிலை) எண்.48/தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத்துறை நாள். 26-02-2021
3. தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள், ந.க.எண்.21925/ஜே/இ4/2021 நாள்.09-04-2021
4. வேலூர் மாவட்டக் கல்வி அலுவலரின் ந.க.எண் 2911 / அ1 / 2021 நாள் 20-09-2021

........

வேலூர் மாவட்டம், குடியாத்தம், கொண்டசமுத்திரம் ஊராட்சி நடுநிலைப் பள்ளியில் அலுவலக உதவியாளராக பணிபுரிந்த காலத்தில் 03-12-2004 அன்று காலமான திரு. எம். இராஜசேகரன் என்பவரின் வாரிசுதாரர் திரு. இரா . திருமலை என்பவருக்கு பார்வை 1-ல் காணும் திருப்பத்தூர் மாவட்டக் கல்வி அலுவலரின் செயல்முறைகளின்படி (ஒருங்கிணைந்த மாவட்டமாக இருந்தபோது) கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக தற்காலிமாக நியமனம் செய்யப்பட்டு 01-08-2016 முற்பகல் முதல் கொட்டமிட்டா அரசு உயர்நிலைப் பள்ளியில் பணிபுரிந்து தற்போது கே வி குப்பம் அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளிக்கு மாறுதல் பெற்று பணிபுரிந்து வருகிறார்.

பார்வை 2-ல் காணும் அரசாணை பத்தி 5.1 மற்றும் 5.2ல் கீழ்க்காணுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

(5.1) 02.02.2016 முதல் 31.12.2019 வரை கருணையடிப்படையில் பணியமர்த்தப்பட்டு எங்களை விதிகளை (Relaxation of Rules ) மற்றும்

தேவைப்படாத அனைத்து பணியாளர்களின் பணி நியமனமும் நடைமுறையில் உள்ள விதிகளுக்குட்பட்டு வரன்முறைப்படுத்தப்படுகிறது.

(5.2) மேலே பத்தி 5.1ல் உள்ள ஆணையினை செயல்படுத்த, சம்பந்தப்பட்ட நியமன அலுவலர்களின் ( Appointing authority ) ஒரு நிலை கூடுதல் அதிகாரம் பெற்ற அலுவலர்கள் ( One level higher than the appointing authority ) அவரவர் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள கருணை அடிப்படையில் பணியமர்த்தப்பட்ட அரசுப் பணியாளரின் பணியினை வரன்முறை செய்து உரிய செயல்முறை ஆணை ( Proceedings ) வெளியிட்டு, தொடர்புடைய அரசுப் பணியாளரின் பணிப்பதிவேட்டில் பதிவு செய்யப்பட வேண்டும் எனவும் அறிவுறுத்தப்படுகின்றனர்.

எனவே, தனியாருக்கு எந்தவித விதித்தளர்வு மற்றும் அரசாணைகளுக்கு விலக்கு ஏதும் தேவைப்படாத நிலையில் பார்வை 2-ல் காணும் அரசாணையின் படியும், பார்வை 4-ல் காணும் கடிதத்தில் நியமன அலுவலரின் பரிந்துரையின் பேரில் திரு. இரா . திருமலை என்பவர் கருணை அடிப்படையில் தமிழ்நாடு அமைச்சுப்பணியில் இளநிலை உதவியாளராக நியமனம் பெற்ற நாளான 01-08-2016 முற்பகல் முதல் பணிவரன்முறைப்படுத்தி ஆணை வழங்கப்படுகிறது.

மேற்படி திரு. இரா. திருமலை பணியேற்ற நாள் முதல் மூன்றாண்டு காலத் தொடர் பணியில் ஈராண்டு காலத்தில் தகுதிகாண் பருவத்தை திருப்திகரமாக முடிக்க வேண்டுமெனவும் அறிவுறுத்தப்படுகிறார். தகுதிகாண் பருவகாலத்தில் மேற்படி தனியார் தமிழ்நாடு அமைச்சுப்பணி விதிகளில் குறிப்பிட்ட தேர்வுகள் / பயிற்சிகளில் தேர்வு பெற வேண்டுமென்றும் ஆணையிடப்படுகிறது.

முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்.

27/9/21

பெறுநர்

சார்ந்த பணியாளர் (உரிய வழியாக)

நகல் .

1. இணை இயக்குநர் (பணியாளர் தொகுதி) பள்ளிக் கல்வி ஆணையரகம் சென்னை -6 அவர்களுக்கு தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது.
2. மாவட்டக் கல்வி அலுவலர் வேலூர் தகவலுக்காக அனுப்பலாகிறது.
3. தலைமை ஆசிரியர் அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி கே வி குப்பம், வேலூர் மாவட்டம் தகவலுக்காகவும் தொடர் நடவடிக்கைக்காகவும் அனுப்பலாகிறது.